**அரசின் நிதிக்கூற்றுக்கள் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான / மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

----------------------------------------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2.1 (அ)(i)(ii) மற்றும் (iv), 1.6.2.1 (இ)(ஈ), 1.6.2.2, 1.6.2.3 (அ), 1.6.2.4 (ஆ), 1.6.2.6, 1.6.2.7(அ) மற்றும் 1.6.2.8 (அ)(ஆ)(இ) பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பில் கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புகளை சீராக்குவதற்கு அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுகள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்

2005 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கு மாதிரியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவு 254 இன் பிரகாரம் 10 ஆண்டுகளில் தற்போது பயன்படுத்தப்படும் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையிலிருந்து அட்டுறு கணக்கீட்டு முறைமையின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வருமானம் மற்றும் செலவின அடிப்படையிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படை என இரண்டு அடிப்படைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

#### 1.6.2.1 அரச படுகடன்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசினால் செலுத்த வேண்டிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் அளவு கடன் மீதி ரூபா 12,187,858 மில்லியன் ஆக இருந்ததுடன், மாதிரி பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட பின்வரும் | | |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களின் அடிப்படையில் அந்த கடன் மீதி ரூபா 701,152 இனால் குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு. | | |
| (i) | குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட திறைசேரி பிணை முறிகள் தொடர்பான கணக்கீட்டு கொள்கை 2016 ஆம் ஆண்டு முதல் சீராக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் திறைசேரி பிணைமுறி வழங்கும் போது அவற்றின் தேறிய பெறுமதிக்குப் பதிலாக முகப்பு பெறுமதிக்கு கணக்கீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட திறைசேரி பிணை முறிகளின் முகப்புப் பெறுமதி தொடர்ந்தும் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாததன் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதிக்கூற்றுக்களில் திறைசேரி பிணை | குறித்த புதிய கொள்கைக்கமைய கணக்கு வைப்பதற்கு நாளதுவரையாக்கப்பட வேண்டும். | இந்த கணக்கு வைத்தலுக்காக ரூபா 318 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதால் 2016ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளியிடப்பட்ட பிணைமுறிகளுக்குரிய ஆகக் குறைந்த விலை அந்த பிணைமுறிகளின் முதிர்வு ஆண்டில் சீராக்கம் மேற்கொள்வதற்கும், அதுவரையிலும் நிதிக்கூற்றுக்களில் பதிவொன்றாக அந்த பிணைமுறிகளின் முகப்பெறுமதியை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

முறிகளுக்கு உரிய மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 318,246 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ii) | அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன்களில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய மீதி ரூபா 172,717 மில்லியன் ஆகும். இது தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட MPS/SEC/2017/32 மற்றும் 2017 யூலை 20 ஆந் திகதிய ‘‘அம்பாந்தோட்டை துறைமுக சலுகை ஒப்பந்தம்’’ என்ற பெயரிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் | அரச படுகடன்களை கணக்கு வைத்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை 2017ஆம் ஆண்டு வரையிலும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செலுத்தப்படுவதுடன், அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கடன் சேவைப்படுத்தல் திறைசேரியினால் மேற்கொள்ளப்படும். ஹம்பாந்தோட்டை துறைமுகம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்தொன்றாகும். அதனால், குறித்த கடன் தொகையையும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டும் என பொது மயற்சிகள் திணைக்களத்தின் செயலாளரினால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக அரசினால் எடுக்கப்பட்ட கடன்களிலிருந்து மேலும் செலுத்த வேண்டிய மீதி மீளக் கொடுப்பனவு பொறுப்பு அக்கடன் உடன்படிக்கை அமுலாகும் திகதி முதல் அமுலாகும் வகையில் பொது திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும் அக்கடன் மீதி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அக்கடன் மீதி துறைமுக அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டம் - கட்டம் II இன் கீழ் 2019 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 8,159 மில்லியனான வெளிநாட்டு கடன் தொகை கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்த | அரச படுகடன்களை கணக்கு வைத்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டம் - கட்டம் II இன் கீழ் 2019 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 8,158,687,137 வெளிநாட்டு கடன் தொகை ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் கிடைத்த கடன் அல்லாத காரணத்தால் |

| | | | |
|---|---|---|---|
| | துடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | அந்த கடன் தொகை இலங்கை துறைமுக அதிகாரசபையின் புத்தகங்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iv) | 2019 ஆம் ஆண்டில் தீர்வையான 129 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 176,844 மில்லியன் மற்றும் 19 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2018 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் தீர்வையாகியிருந்த ரூபா 33,345 மில்லியனாக மொத்தம் ரூபா 210,189 மில்லியன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெளிநாட்டுக் கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு படுகடன்களை கணக்கு வைத்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | 2018ஆம் ஆண்டினுள் அல்லது அதற்கு முன்னர் தீர்வையாகாத ரூபா 33,345 மில்லியனுக்கு மற்றும் 2019 ஆம் ஆண்டினுள் தீர்வையாகாத ரூபா 64,558 மில்லியனுக்குரிய கணக்கு வைப்பதற்காக போதியளவான நிதியேற்பாடுகள் குறித்த அமைச்சு மற்றும் திணைக்களத்திடம் காணப்படவில்லை. 2019ஆம் ஆண்டிற்கான கடன் தீர்வையாளர்களின் ரூபா 24,690 மில்லியன் 2020.02.28ஆந் திகதி வரையிலும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசின் நிதிக்கூற்றுக்களின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவு பெறுமதி ரூபா 572,338 மில்லியன் ஆக இருந்த போதிலும், | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதற்குரிய பதிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகள் சரியானதாக காணப்பட வேண்டும். | அந்த வேறுபாடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ள கீழ்வரும் கடன் இலக்கங்களின் கீழுள்ள கடன் மீதிகளக்கு உரிய |

<table>
<tr>
<td></td>
<td>நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 29 (வெளிநாட்டுக் கடன் மீதிகள் கூற்று) இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவு பெறுமதி ரூபா 565,820 மில்லியன் என காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதற்குரிய குறிப்புக்களுக்கு இடையே வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவு பெறுமதியில் ரூபா 6,518 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.</td>
<td></td>
<td>கடன் வழங்கிய நிறுவனங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கடன் மீளளிப்பு ஆகும்.
<table>
<tr><th>கடன் இலக்கம்</th><th>தொகை (ரூபா மில்லியன்)</th></tr>
<tr><td>2007044</td><td>4,988.86</td></tr>
<tr><td>2013014</td><td>1,529.08</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>6,517.94</td></tr>
</table>
</td>
</tr>
<tr>
<td>(இ)</td>
<td>அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த அரச கடன் மீதி ரூபா 12,187,858 மில்லியனாக இருந்த போதும் இலங்கை மத்திய வங்கியின் தகவல்களின் பிரகாரம் அத்திகதியில் அரச கடன் மீதி ரூபா 13,301,411 மில்லியனாக இருந்தமையால் அரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி பேணப்படும் தகவல்களுக்கு இடையே அரச கடன் மீதிகளுக்கு இடையே ரூபா 843,553 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.</td>
<td>அரச படுகடன் தொடர்பில் அனைத்து அறிக்கைகளிலும் உள்ளடக்கப்படும் பெறுமதிகளை ஒன்றுக்கொன்று சீராக்குவதற்கு அல்லது இணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.</td>
<td>குறித்த தகவல்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட முகாமைத்துவ மற்றும் சட்டரீதியான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக ஒன்றுக்கொன்று வேறுபட்ட தத்துவங்களை பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்படுகின்றமையால், அந்த அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அந்த தகவல்களை முன்வைக்கும் விதத்தில் வேறுபாடுகள் நிலவின.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வெளிநாட்டுக் வள திணைக்களத்தின் 854-1 அறிக்கை மற்றும் அரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 29 வெளிநாட்டு கடன் மீதிகள் கூற்றுடன் ஒப்பிடும் போது நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 341 மில்லியன் குறைவாகவும், 05 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 2,049 மில்லியன் கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 02 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்குரியதாக ரூபா 01 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அரச படுகடன் தொடர்பில் அனைத்து அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகள் ஒன்றுக்கொன்று ஒப்பிடுவதற்கு அல்லது இணக்கம்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அ. நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் குறைத்து கணக்கு வைப்பதற்கு பின்வரும் விடயங்கள் காரணமாக அமைந்தன.<br><br>i. ஆண்டில் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு 2020ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டமை.<br><br>ii. வெளிநாட்டு நாணயங்களை இலங்கை ரூபாவிற்கு மாற்றம் செய்யும் போது ஐ.அ.டொலருக்கு இரு பெறுமதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை.<br><br>iii. 2020ஆம் ஆண்டின் போது அளித்தவருக்கு மீள செலுத்தப்பட்டுள்ள தொகை 2019ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் உள்ளடக்கப்படாமை. |

### 1.6.2.2 உப கடன்

-----------------

**கணக்காய்வு அவதானிப்பு**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருந்த உப கடன் மீதி ரூபா 177,149 மில்லியனாக இருந்தது. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது 05 உப கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தலுக்கு இடையே ரூபா 1,853 மில்லியன் சாதகமான மீதியொன்றும் 02 உபகடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 27 மில்லியன் பாதகமான மீதியொன்றும் அவதானிக்கப்பட்டது.

**பரிந்துரை**

சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்பட வேண்டும்.

**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**

திறைசேரியின் புத்தகங்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் ஆகியவற்றுக்கிடையிலான நலனான மீதிகளாக கணக்காய்வு ஐயவினாக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 05 கணக்குகளுக்குரிய வேறுபாடுகளுக்கான காரணங்கள் பின்வருமாறு ஆகும்.

| நிறுவனம் | வேறுபாடு ரூபா | வேறுபாட்டுக்கான காரணம் |
|---|---|---|
| NLDB Importation of Dairy Animal | 1,759,303,217 | NLDB நிறுவனத்தினால் 2020.03.11ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரமான மீதியுடன் இணக்கம் செய்யப்பட்டது. |
| RDB SLP 81 SMILE III RF | 9,000,000 | 2019.12.31ஆந் திகதி செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்ட தொகை 2019ஆம் ஆண்டினுள் கடன் வழங்குவதற்காக வங்கிக்கு விடுவிக்கப்படாமை. |
| HDFC/NHDA | 3,410,430 | வேறுபாட்டிற்கான காரணம் இனங்காணப்பட்டுள்ளதுடன், 2020ஆம் ஆண்டினுள் குறித்த திருத்தங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| | Jalthara Housing Loan NDB SLP 81 SMILE III RF | 28,400,000 | 2019.12.31ஆந் திகதி செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த பணம் 2019ஆம் ஆண்டினுள் கடன் வழங்குவதற்காக வங்கிக்கு விடுவிக்கப்பட்டிராமை. |
| | DFCC SLP 81 SMILE III RF | 1,106,160 | 2019.12.31ஆந் திகதி செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த பணம் 2019ஆம் ஆண்டினுள் கடன் வழங்குவதற்காக வங்கிக்கு விடுவிக்கப்பட்டிராமை. |

### 1.6.2.3 அரசிற்கு சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அரசிற்கு சொந்தமான செயற்திட்டங்களில் மூலதன பங்களிப்பு ரூபா 611,961 மில்லியன் ஆக இருந்தது. தெரிவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு | | |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனையின் போது 05 நிறுவனங்களுக்குரிய மூலதன பங்களிப்பு ரூபா 1,433.5 மில்லியன் கூடுதலாகவும் ஒரு நிறுவனத்திற்குரியதாக மூலதன பங்களிப்பு ரூபா 25,857.5 மில்லியன் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்காக பொது திறைசேரியினால் ரூபா 10,014,284ஆன மூலதனப் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், நேரடி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அது ரூபா 7,904,002 தொகை மற்றும் UNDP இன் மூலதனப் பங்களிப்பு ரூபா 2,110,282 ஆனமையால் 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றினுள் அரசின் மூலதனப் பங்களிப்பு ரூபா 2,110,282 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட புத்தகங்கள் பேணப்பட வேண்டும். | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் (UNDP) வழங்கப்பட்டுள்ள நன்கொடையின் பெறுமதி நிறுவனத்தினால் UNDP இன் மூலதன பங்களிப்பொன்றாக நிதிக்கூற்றுக்களினுள் இனங்காணப்பட்டிருந்தது. |
| (ii) | ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனைக்கு பொது திறைசேரியினால் ரூபா 1,016,825,160 ஆன மூலதனப் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், நேரடியான மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அந்த மூலதனம் பின்வரும் தரப்பினரால் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>ரூபா<br>Grant from Japanese Government 928,851,297<br>Grant received under Japanese International Co-operation 50,124,930 | சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட புத்தகங்கள் பேணப்பட வேண்டும். | இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளுடன் தொடர்புடைய தரப்பினர் இலங்கை அரசு என்பதால் குறித்த நன்கொடைகளின் பெறுமதிகளும் இந்த நிறுவனத்திற்காக இலங்கை அரசின் மூலதனப் பங்களிப்பாக இனங்காணப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| Donation to purchase a Hemo Dialysis Machine | 799,233 |
| Cars & Equipment donated by Kajima Corporation of Japan | 260,000 |
| Grants from Olympus Corporation of Japan | 79,700 |
| Central Bank Grants for Cardio-Thoracic Unit | 30,000,000 |
| Grants from President Fund | 6,710,000 |
| | **<u>1,016,825,160</u>** |

| | | | |
|---|---|---|---|
| (iii) | இலங்கை ஏற்றுமதி கடன் கூட்டுத்தாபனம் மற்றும் பொது திறைசேரியினால் ரூபா 40,000,000 ஆன மூலதனப் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், நேரடி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அது ரூபா 30,000,000 தொகை மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களினுள் ரூபா 10,000,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட புத்தகங்கள் பேணப்பட வேண்டும். | வேறுபாட்டுக்கு காரணமாக அமைந்துள்ள ரூபா 10,000,000 தொடர்பிலான சீராக்கங்கள் 2012ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் மேலதிக தகவல்களை தேடியறிந்து உரிய நடவடிக்கை எடுக்க குறித்துவைத்துக்கொள்ளப்பட்டது. |
| (iv) | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு பொது திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட மூலதனப் பங்களிப்பு ரூபா 59,348,887,214ஆன போதிலும், மீதி சான்றுபடுத்தல்களின் பிரகாரம் ரூபா | சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட புத்தகங்கள் பேணப்பட வேண்டும். | நீர் மற்றும் கழிவுநீர் செயற்திட்டத்திற்காக திறைசேரியினால் மேற்கொள்ளப்படும் கடன் மீள் செலுத்தல்கள் மற்றும் அதன் வட்டியை |

| | | | |
|---|---|---|---|
| | 85,106,439,687 ஆகும். இதன் பிரகாரம், அரசின் மூலதனப் பங்களிப்பு ரூபா 25,757,552,473 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | திரைசரியின் மூலதனப் பங்களிப்பாக நிறுவனத்தினால் திறைசேரியின் பரிந்துரையின்றி இனங்காணப்பட்டிருந்தமை இடம்பெற்றுள்ளது. |
| (v) | திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்காக திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனப் பங்களிப்பு ரூபா 10,000,000 ஆன போதிலும், நேரடி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அவ்வாறு மூலதனப் பங்களிப்பொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களினுள் ரூபா 10,000,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சரியான மற்றும் நாளதுவரையாக்க ப்பட்ட புத்தகங்கள் பேணப்பட வேண்டும். | இலங்கை அரசினால் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ள மூலதனப் பங்களிப்பு ரூபா 10 மில்லியனாக காணப்பட்டதுடன், மீதி உறுதிப்படுத்தல் கடிதமொன்று நிறுவனத்தினால் பெற்றுக்கொள்வதற்கு குறித்துக்கொள்கின்றேன். |
| (vi) | நகர அபிவிருத்தி அதிகாரசபை | | |
| | • நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அரசின் மூலதனப் பங்களிப்பு ரூபா 100,000,000 ஆன போதிலும், அரசின் நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான மீதியொன்று காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>• அரசினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,257,651,060 ஆன நன்கொடையொன்று அரசின் நிதிக்கூற்றுக்களில் மூலதனப் பங்களிப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த நன்கொடை தொகையினை வருடாந்தம் | சரியான மற்றும் நாளதுவரையாக்க ப்பட்ட புத்தகங்கள் பேணப்பட வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 1,257,651,060 ஆன தொகை மற்றும் பொது திறைசேரியினால் நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மூலதனப் பங்களிப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், பதிவழிப்பதற்கான அங்கீகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டவாறு காணப்பட்ட மீதியாகும். அதன் பிரகாரம், 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் நிலவிய மீதியானது ரூபா 922,649,889 ஆன போதிலும், நிறுவனத்திலிருந்து கிடைத்த மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அது ரூப 863,079,889 ஆகும். | | வழங்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரப்பட்டுள்ள போதிலும், இதுவரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (ஆ) | அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் அரசிற்கு சொந்தமான வியாபாரங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மூலதன பங்களிப்பு ரூபா 29,145 மில்லியனாக இருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டில் செலவின விடய இலக்கம் 2301 ''மூலதன பங்களிப்பு'' செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 24,910 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் 2301 செலவின விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு இடையே ரூபா 4,235 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அரசிற்கு சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பினை உரிய முறையில் கணக்கு வைக்க வேண்டும். | 2301 செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்படுவது அரசினால் பாதீட்டு ஒதுக்கீட்டின் கீழ் அரச முயற்சிகளுக்கு மேற்கொள்ளப்படும் உரித்துக்களின் பங்களிப்பு மாத்திரம் ஆகும். எனினும், தேசிய நீர்வழங்கல் சபை நீங்கலாக சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள ஏனைய வேறுபாடுகள் அரசின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும் ஏனைய சீராக்கங்கள் மற்றும் திருத்தங்கள் ஆகும். அந்த சீராக்கங்கள் 2301 செலவின விடயத்தின் கீழ் பதிவு செய்யப்படமாட்டாது. |
| (இ) | அரசின் மூலதன பங்களிப்புடனான பெருந்தோட்ட கம்பனியொன்றில் அரசிற்கு சொந்தமான மூலதன பங்களிப்பு ரூபா 10 ஆன 1,900,276 பங்குகளால் மீளாய்வாண்டில் அதிகரித்திருந்த போதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் மூலதன | அரசின் நேரடி மூலதன பங்களிப்பு நிதிக்கூற்றுக்களில் சரியாக காண்பிப்பதற்கு | மீளாய்வாண்டின் போது பங்குகளின் அளவானது 5,700,834 வரை அதிகரிப்பதற்கு ஒப்பாக மூலதனப் பெறுமதியில் இடம்பெற வேண்டிய |

| | | |
|---|---|---|
| பெறுமதியில் எவ்வித அதிகரிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே நேரடி மீதி உறுதிப்படுத்தல் மற்றும் திறைசேரி அறிக்கைக்கு இடையே ரூபா 3 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேறுபாடுகளை உரிய முறையில் சீராக்கம் செய்வதற்கு குறித்துவைத்துக்கொள்ளப் பட்டது.<br><br>மீதிகளை உறுதிப்படுத்தும் போது குறித்த பெறுமதி சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றமையால் குறித்த மீதிகளுக்கிடையில் வேறுபாடிடான்று நிலவக்கூடும். |

### 1.6.2.4 பொறுப்புகள்

---------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் III அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ரூபா 164,567.21 ஆன பொறுப்புக்கள் 2019 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட பொருட்கள், சேவைகளுக்காக இருப்பதால் அது நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு செய்யப்படாமையால் உள்ளவாறாக 2019 ஆம் | தேவையான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களை நாளதுவரையாகவும் சரியாகவும் சமர்ப்பிக்க வேண்டும். | நி.பி. 94 மற்றும் 115 இன் கீழ் வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகள் உள்ளடங்களாக ஏற்படுத்தப்பட்ட பொறுப்புகளுக்காக அந்த வருடத்தினுள் கூடிய விரைவில் கொடுப்பனவுகளை மேற்கொண்டு தீர்க்க வேண்டும். தற்போது குடியரசின் நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் போது பெற்றுக்கொண்ட பொருட்கள், சேவைகளுக்கான செலவினம் அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | மேம்படுத்தப்பட்ட பணத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டமையால் பொறுப்புகளாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவது நீண்ட கால அடிப்படையில் கடனை மீள செலுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் நிதி மற்றும் நிதியல்லாத சொத்துக்களை பெற்றுக்கொள்வதற்கான பொறுப்புகள் மாத்திரம் ஆகும்.<br><br>எனினும், நடைமுறைக்கு சாத்தியமான முறையில் ஒவ்வொரு வருடத்தினதும் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுக்கு தேவையான கட்டுநிதி விடுவிக்கப்படாமையால் ஆண்டினுள் தீர்ப்பனவு செய்யப்படாத பொறுப்புகள் நிதி நிலைமைக் கூற்றினுள் வெளிப்படுத்த முடியாததுடன், அதன் பொறுப்புகள் தொடர்பான விபரங்கள் கணக்கு குறிப்புகளாக சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | 2015 பாதீட்டு முன்மொழிவுக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகளில் அல்லது விசேட அனுமதிப்பத்திரம் | தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களை | சிரேஷ்ட பிரஜையொருவரால் பேணிச் செல்லப்படும் நிலையான வைப்புக்களுக்கான வட்டி சலுகைகள் செலுத்தும் |

| | | | |
|---|---|---|---|
| | பெற்ற வங்கிகளில் ரூபா 1.5 மில்லியன் அல்லது அதற்கு குறைவாக சிரேஷ்ட பிரஜையொருவரால் பேணிச் செல்லப்படும் நிலையான வைப்புக்களுக்கான 15 சதவீதமான வட்டி வீதமொன்று செலுத்தப்படுகின்றது. அதன் போது பொதுவான வட்டி வீதம் மற்றும் செலுத்தப்படும் 15 சதவீத வட்டி வீதத்திற்கு இடையே வேறுபாட்டிற்குரிய தொகையை பொது திறைசேரியினால் குறித்த வங்கிக்கு பணத்தை மீளளிப்பதற்கு இணங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அம்மேலதிக வட்டியாக 07 அரச வங்கிகளுக்கும் 22 தனியார் வங்கிகளுக்கும் செலுத்த வேண்டிய மொத்த பெறுமதி ரூபா 50,038 மில்லியனாக இருந்ததுடன் அத்தொகை அரசின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாகவும் சரியானதாகவும் சமர்ப்பிக்க வேண்டும். | நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2015 ஆம் ஆண்டு முதல் போதுமான பாதீட்டு நிதியேற்பாடு கிடைக்காமை, கட்டுநிதி கிடைக்காமை மற்றும் நிதியேற்பாடுகளை மீள பெற்றுக்கொள்வதன் மூலம் பாதீட்டு முகாமைத்துவத்தின் காரணமாக 2019.12.31ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 45,845,944,814.42 ஆன ஒட்டுமொத்த வட்டித் தொகையை செலுத்த முடியாதிருந்தது. |
| (இ) | பெருந்தெருக்களை விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதற்காக இலங்கை அரசிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் உள்நாட்டு வங்கிகளிலிருந்து | தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களை நாளதுவரையாகவும் சரியானதாகவும் சமர்ப்பிக்க வேண்டும். | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கடன் சேவைப்படுத்தல் இயலுமை இல்லாதிருந்த சந்தர்ப்பத்தில் கடன் செலுத்துவதற்காக நிலுவைப் பணத்தை வழங்குவதற்காக மாத்திரம் வீதி அபிவிருத்தி |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொண்ட கடன்தொகைக்காக கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவிற்காக பொது திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய மொத்தம் ரூபா 19,353 மில்லியன் தொகை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அரசின் நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான செலுத்த வேண்டிய தொகையொன்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | அதிகாரசபைக்கு மூலதனப் பங்களிப்பாக திறைசேரியினால் நிதி அளிக்கப்பட்டிருந்த போதிலும், பொது திறைசேரியினால் நேரடியாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன் செலுத்தலொன்று மேற்கொள்ளப்படாது. எவ்வாறான போதிலும், அரசின் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புகளின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக உள்நாட்டு வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ள திறைசேரி பிணைமுறி தொடர்பில் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன்தொகைக்காக கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவிற்காக பொது திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,150 மில்லியனான தொகையொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அரசின் நிதிக்கூற்றுக்களில் அவ்வாறு | தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களை நாளதுவரையாகவும் சரியானதாகவும் சமர்ப்பிக்க வேண்டும். | அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வருடாந்தம் செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டு கடன் மற்றும் வட்டி ஆகியவற்றுக்காக பொது திறைசேரியினால் மூலதனப் பங்களிப்பின் கீழ் நிதி அளிக்கப்படுவதுடன், பொது திறைசேரியின் புத்தகங்களில் அவ்வாறு வழங்கப்படும் நிதி மாத்திரம் அறிக்கையிடப்படும். திறைசேரியினால் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு எதிர்காலத்தில அவ்வாறு |

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய தொகையொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | வழங்கப்படவேண்டிய நிதியின் அளவு திறைசேரியின் பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டிருந்தது. |

### 1.6.2.5 அரசிற்கு சொந்தமான தேறிய முதலீடுகள் மற்றும் மீள்நிதியிடல் கடன் பெற்றுக்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை மத்திய வங்கியில் காணப்படும் தகவல்களின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் 12 கடன் முன்மொழிவுகளுக்குரிய ரூபா 13,426 மில்லியன் கூட்டுப்பெறுமதியான கணக்கு மீதிகள், இலங்கை மத்திய வங்கிக்கு உரித்தானதல்ல எனவும் அம்மீதிகள் இலங்கை அரசிற்கு சொந்தமான முதலீடுகள் மற்றும் மீள்நிதியிடல் கடன் எடுத்தல் எடுத்தல் என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அக்கணக்கு மீதிகள் அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களை நாளதுவரையாகவும் சரியானதாகவும் சமர்ப்பிக்க வேண்டும். | 02 கடன் முன்மொழிவுத் திட்டங்கள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது மொத்த கடன் தொகையும் தீர்க்கப்பட்டுள்ளமையால் 2019ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படமாட்டாது. ஏனைய கடன் முன்மொழிவுத் திட்டங்களுக்குரிய கணக்கு மீதிகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி உண்மையாக அரசின் கணக்குகளுக்கு எடுக்க |

| | | |
|---|---|---|
| | | வேண்டிய கணக்கு மீதிகள் காணப்பட்டால் இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் பொருத்தமானவாறு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

**1.6.2.6 தீர்க்கப்படாத மீதிகள்**

**-----------------------------------**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்களினுள் நீண்டகாலமாக விளைவற்று காணப்படும் 08 கணக்குகளுக்குரிய ரூபா 1,146 மில்லியன் வரவு மீதிகள் தீர்க்கப்படாது தொடர்ந்தும் நிதி நிலைமைக் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களில் தீர்ப்பனவு செய்யப்பட்ட மற்றும் நாளதுவரையாக்க ப்பட்ட பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். | திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த குழுவின் பரிந்துரை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2.7 வெளிநாட்டு மானியங்கள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க வெளிநாட்டு உதவிகளை கணக்கு வைப்பதற்குரிய அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கமைய வெளிநாட்டு உதவிகள் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பொது திறைசேரிக்கு அறிவிக்காது 24 நிறுவனங்களால் 77 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 2,026 மில்லியன் வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக உரிய நிறுவனங்களுக்கு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிநாட்டு நன்கொடைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். | 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2.0 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் நிதிப்பிரமாணக் கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளாது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுமதியின்றி நேரடியாக வெளிநாட்டு மானியங்களை பெற்றுக்கொள்ளும் அரச நிறுவனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு வரிசை அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவுரை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த மானியங்கள் தொடர்பான தகவல்கள் பொது திறைசேரியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிராததுடன், ஏனைய அமைச்சுகள்/திணைக்களங்களுக்கு இவ்வாறான உதவிகள் கிடைத்துள்ளனவா என்பது தொடர்பில் உறுதிப்படுத்தும் போதியளவான நடைமுறையொன்று பொது திறைசேரியிடம் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டினுள் பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு வெளிநாட்டு மானியங்களாக கிடைக்கும் பணத்தில் குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு செலவினத் தலைப்புகளின் கீழ் ரூபா 13,341 மில்லியன் கூட்டுத்தொகையான பாதீட்டு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் குறித்த பணிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது ரூபா 7,259 மில்லியன் அல்லது மொத்த நிதியேற்பாட்டில் 54.41 சதவீதம் மாத்திரம் ஆகும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிநாட்டு நன்கொடைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். | இந்த நிலைமையை தடுப்பதற்காக / குறைப்பதற்காக கட்டுப்பாட்டினை மீறிய சந்தர்ப்பங்கள் நீங்கலாக வெளிநாட்டு நன்கொடையின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதீட்டின் குறைப்பயன்பாடு தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் குறித்த அமைச்சின் நிதிக்கூற்றுக்களுடன் சமரப்பிக்கப்பட வேண்டும் என அமைச்சின் செயலாளர்களுக்கு வழங்குவதற்கு |

நிமித்தமாகவுள்ள மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.6.2.8 நிதியல்லாத சொத்துக்கள்

---------------------------------------------

அரசின் நிதிக்கூற்றுகளுக்கமைய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்கள் (Non-Financial Assets) பெறுமதியானது ரூபா 1,355,270 மில்லியன் ஆகும். அதற்குரிய நிதிக்கூற்று குறிப்பு இலக்கம் 16 இல் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கிடையில் தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 80 நிறுவனங்களில் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளில் ஏ.சீ.ஏ – 6 மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ள ‘‘நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில்’’ உள்ளடக்கப்பட்டுள்ள 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களின் மீதியுடன் இணக்கம் செய்யும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 9 நிறுவனங்களில் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளில் ஏ.சீ.ஏ – 6 மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ள ‘‘நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில்’’ கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அரசின் | நிதியல்லாத சொத்துக்களை கணக்கு வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | குடியரசின் இறுதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ஒவ்வொரு செலவின அலகுகளினால் அரச கணக்குகள் திணைக்களத்தின் தரவுக் கட்டமைப்பிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்படாதிருந்த ரூபா 3,630 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதியானது நிதியல்லாத சொத்துக்களாகும். | | நிதி மற்றும் நிதியல்லாத சொத்துக்களின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் தனிப்பட்ட சொத்துக்களின் மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட பெறுமதிகள் மாத்திரம் உள்ளடக்கப்பட வேண்டும். எனினும், கட்டுப்பாட்டு மீதியுடன் தொடர்ந்தும் இணக்கம் செய்யப்படாத சொத்துக்கள் அந்த நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்படக்கூடும் என்பதுடன், அவற்றுள் இணங்காத மற்றும் தொடர்ந்தும் அறிக்கையிடப்பட வேண்டிய சொத்துக்களை அறிக்கையிடுவதற்காக 05 வருட காலம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 10 நிறுவனங்களில் நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 85,818 மில்லியனாக இருந்ததுடன் அந்த நிறுவனங்களின் ஏ.சீ.ஏ – 6 மாதிரியின் பிரகாரம் மீதியானது ரூபா 50,868 மில்லியன் மாத்திரமாக இருந்தமையின் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 34,950 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதியல்லாத சொத்துக்களை கணக்கு வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (இ) | தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 25 நிறுவனங்களில் நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 217,882 மில்லியனாக | | |

இருந்ததடன் அந்த நிறுவனங்களின் ஏ.சீ.ஏ – 6 மாதிரியின் பிரகாரம் மீதியானது ரூபா 366,981 மில்லியன் மாத்திரமாக இருந்தமையின் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதிக்கூற்றுக்ளில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 149,099 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------------------------

2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது பின்வரும் பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு<br>------------------------------------------ | இணக்கமின்மைகள்<br>------------------------ | பரிந்துரை<br>-------------------------------- | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>----------------------------------- |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு<br>------------------------------------------------------ | | | |
| **(அ) 2019 ஏப்ரல் 05 ஆம் திகதிய 2019 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டம்** | | | |
| (i) அதிகாரச் சட்டத்தின் 2(1)(ஆ) ஆம் பிரிவு | 2019 இன் நிதி ஆண்டில் பெறப்படுகின்ற கடன் பணங்களில் இருந்து எழுந்திருந்த சேமிப்பு மீதி 2019 இன் நிதி ஆண்டிலோ அல்லது ஒரு சந்தர்ப்பத்திலோ அல்லது ஆண்டின் இறுதியிலோ ரூபா 2,079 பில்லியனை விஞ்சாது காணப்பட்டது.<br><br>கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறப்பட்ட கடனின் அளவு ரூபா 2,158 பில்லியன் ஆக காணப்பட்டதன் காரணமாக | ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையினுள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | நாட்டில் உள்ள பொருளாதார வீழ்ச்சியன் காரணமாக 2019ஆம் ஆண்டிற்கான எதிர்பார்த்த வருமானம் கிடைக்காமையும், 2018ஆம் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட பணிகள் மற்றும் சேவைகளுக்காக தீர்க்கப்படாத பட்டியல்கள் 2019ஆம் ஆண்டின் போது செலுத்த நேர்ந்தமையும், குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட செலவினங்கள் மொத்த கடன் செலுத்தல் எல்லையினுள் முகாமை செய்யப்படாத காரணத்தாலும் விஞ்சும் கடன் பெறுகை எல்லையினை உள்ளடக்குவதற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் போது மேற்கூறப்பட்ட கடன் எல்லை ரூபா 79 பில்லியனினால் அதிகரித்து கடன் பெறப்பட்டிருந்தது. | | அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை ரூபா 2,279 பில்லியன வரையிலும் 200 பில்லியனால் அதிகரிப்பதற்கு நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பிற்காக 2019.11.27ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. |
| (ii) | அதிகாரச் சட்டத்தின் 8(1)(ஆ) ஆம் பிரிவு | ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் iii ஆம் பட்டோலையின் கீழ் முற்பணப் பணிகளுக்காக விடய இலக்கம் 15 இன் கீழ் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய செலவு (வரவு) எல்லை ரூபா 1,277 மில்லியனால் அதிகரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், விடய இலக்கம் 12 இன் கீழ் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட ஆகக் | ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளினுள் முற்பணங்கள் / பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 503(1) இன் கீழான முற்பணக் கணக்குகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளிலிருந்தான மீறல்கள் / வீழ்ச்சியடைதல் தொடர்பில் உரிய அமைச்சு / திணைக்களத்தின் முற்பணக் கணக்குகளின் வருடாந்த இணக்கக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>நிதிப்பிரமாணம் 503(1) இன் கீழ் எடுக்கப்படாத எல்லை மீறல்களை அண்மிக்காமைகள் |

| | | | |
|---|---|---|---|
| | குறைந்த பெறுவனவு எல்லை அடையாமல் ரூபா 132 மில்லியன் தொகை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், விடய இலக்கம் 05 இன் கீழ் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய வரவு மீதி எல்லை ரூபா 123 மில்லியனால் அதிகரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | நிதிப்பிரமாணம் 503(2) இன் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், தற்போது பாராளுமன்றம் நடாத்தப்படாத காரணத்தால் பாராளுமன்றம் கூடியதன் பின்னர் எல்லைகளிலான திருத்தங்களை சமர்ப்பித்து அங்கீகாரத்தினை பெற உத்தேசித்துள்ளேன். |
| **(ஆ) 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம்** | | | |
| (i) 3(எ) பிரிவு | ஏதேனுமொரு வருடத்தின் இறுதியில் நிலவக்கூடிய ஆகக்கூடிய பொறுப்புக்களின் பெறுமதி அந்த வருடத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தினை மிஞ்சக்கூடாது. அந்த எல்லைகளுக்கமைய நிதி அமைச்சு செயற்பட்டுள்ளதாக | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | **(i) ஐந்தொகைக்கு புறம்பாக கணக்கு வைக்கப்படும் வெளிநாட்டுக் கடன்கள்**<br><br>அரசினால் ஏற்படுத்திக்கொள் ளப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட் ட பொறுப்புகளின் கீழான 08 கடன் உடன்படிக்கைக |

அமைச்சின் நிதிக் கூற்றுக்களுக்கமைய புலப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் மற்றும் நிதி நிலைமைக் கூற்றிற்கு புறம்பாக கணக்கு வைக்கப்பட்டுள்ள வெவ்வேறு பொது முயற்சிகளுக்குரிய பொறுப்புகளையும் கவனத்திற்கொள்ளும் போது அந்த உரிய எல்லைகள் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

ளுக்குரியதாக 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய பொறுப்புகளின் பெறுமதியான ரூபா 345,453 ஆன தொகை குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், அந்த 08 கடன் உடன்படிக்கைகள் தொடர்பில் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ) புத்தளம் அனல்மின் நிலையத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் இலங்கை மின்சார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அந்த செயற்திட்டங்களுக்குரி கடன் மீள்செலுத்தல்கள் மற்றும் வட்டி

செலுத்தல் 2019ஆம் ஆண்டு முதல் இலங்கை மின்சாரசபைக்கு மேற்கொள்ளப்படும் மூலதனப் பங்களிப்பாக கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மத்தள சர்வதேச சிமான நிலைய செயற்திட்டத்திற்குரிய கடன் மீள் செலுத்தல்கள் ஆரம்பம் முதல் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனியினால் ஆகும்.

(இ) ஹம்பாந்தோட்டை துறைமுகத்தினை நிர்மாணித்தல் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் மூலம் குத்தகை உடன்படிக்கையொன்றின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும், அந்த சொத்து

தொடர்ந்தும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்படுவதுடன் , அதனை கட்டியெழுப்புவதங்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையும் அந்த அதிகாரசபையின் பெறுப்பொன்றாகும்.

**(ii) திறைசேரியின் பிணைமுறி மீதி குறைத்து கணக்கு வைக்கப்படல்**

(ii)

2016ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளியிடப்பட்ட திறைசேரி பிணைமுறிகளுக்குரிய ஆகக் குறைந்த விலை, அந்த பிணைமுறிகள் முதிர்ச்சியடையும் போது சீராக்கம் செய்வதற்கும், அதுவரையிலும் நிதிக்கூற்றுக்களில் பதிவொன்றாக அந்த

பிணைமுறிகளின் முகப்பெறுமதியை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(iii)** **கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டு கடன்**

2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படாதுள்ள போது, திறைசேரியின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி சில அமைச்சுகளில் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் மீள் தீர்வை இடம்பெற்றுள்ளதும், நிதியேற்பாடுகள் நிலவிய

போதிலும், 2019ஆம் ஆண்டின் போது கணக்குகளை தீர்க்கும் சந்தர்ப்பத்தில் கணக்கு வைப்பதற்காக முன்வைக்கப்படாமை மற்றும் வருடாந்த கடன் பெறுகை எல்லையினை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்ட சட்ட வரைபுகளுக்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள சந்ததர்ப்பம் கிடைக்காத காரணத்தால், கணக்கு வைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட சில மீள்தீர்வைகளை கணக்கு வைக்க முடியாதிருந்தது.

**(iv) சூரிய வெவ சர்வதேச கிரிக்கெற் மைதானத்தினை நிர்மாணிப்பதற்காக**

**பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்**

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுக்கிடையே ஒப்பந்தமொன்று கைச்சாத்திடுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், வட்டி மற்றும் மூலதன கொடுப்பனவுகளுக்காக பொருத்தமான வீதமொன்றினை நிதி அமைச்சினால் வழங்குவதங்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2017.12.17ஆந் திகதி திறைசேரியினால் Letter on Securing Debt Services கடிதமொன்று மக்கள் வங்கிக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அரசின் திட்டவட்டமான பொறுப்பொன்றல்லாத நிகழத்தக்க பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டுள்ள திறைசேரி பிணைமுறிகள் மற்றும் சலுகைக் கடிதங்களின் பெறுமதியான ரூபா 858 மில்லியன் நிகழத்தக்க பொறுப்பொன்றானமையால் பொறுப்புகளின் எல்லைக்கு உட்படுத்த முடியாது. |
| (ii) | 3(அ) பிரிவு | “2006ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பாதீட்டு விலகல் அந்த வருடத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஐந்து சதவீதத்தினை விஞ்சாது எனவும், அந்த மட்டத்திலேயே பின்னர் பேணப்படும் என்பது தொடர்பிலும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2003 இன் 03ஆம் இலக்க முகாமைத்துவ பொறுப்புகள் அதிகாரச்சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் பாதீட்டு பற்றாக்குறையானது, மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதத்தினை விஞ்சலாகாது எனும் கூற்று |

அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு விலகல் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தினை விஞ்சாத வகையில் மதிப்பீடு செய்வதற்கும், மீளாய்வாண்டின் இறுதியிலான பாதீட்டு விலகல் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தினை விஞ்சாத வகையில் பேணுவதற்கும் முடியுமானதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு விலகல் 6.28 சதவீதம் மற்றும் உள்ளபடியான பாதீட்டு விலகல் 6.74 சதவீதமாக காணப்பட்டது.

சரியானதாகும். அவ்வாறே, இங்கு பாதீட்டு பற்றாக்குறையாக கருதப்படுவது பொருளாதார வகைப்படுத்தலுக் கமைய தயாரிக்கப்பட்ட பாதீட்டு பற்றாக்குறை ஆகும். அதிகாரச்சட்டத்தி ல் குறிப்பிடப்பட்டுள் ள அந்த இலக்கினை அடைவதில் சிரமமான நிலையொன்று ஏற்பட்டால் அது தொடர்பில் பொருத்தமான காரணங்களை முன்வைத்து எதிர்காலத் திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்திற் கு அறிவிக்க வேண்டும் என அதிகாரச்சட்டத்தி ல் குறிப்பிடப்பட்டுள் ளதுடன், அதன் பிரகாரம் செயற்பட்டு குறித்த

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படும் அரச நிதி முகாமைத்துவ அறிக்கையில் அந்த விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளமையை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | அமைச்சு மற்றும் திணைக்களதங்களின் கட்டுநிதிக் கணக்கு மீதிகள் ஒவ்வொரு வருடத்தினதும் திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 35 அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் ரூபா 2,606 மில்லியன் கூட்டுத்தொகையான கட்டுநிதி மீதிகள் அவ்வாறு தீர்க்கப்பட்டிராததுடன், அதனுள் பல வருடங்களாக முன்கொண்டுவரப்படும் ரூபா 324 மில்லியன் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செய்றபட வேண்டும். | 2019.12.31ஆந் திகதியில் உள்ளபடியாக தொடர்ந்தும் தீர்க்கப்படாது காணப்படும் கட்டுநிதிக் கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு தீர்க்கப்பட வேண்டுமென அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகையான கணக்கு மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | | |
| **(ஈ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றிக்கை** | | | |
| (i) 2(அ) பிரிவு | 2019 ஆம் ஆண்டிற்கான 19 செலவினத் தலைப்புகளுக்குரிய 64 செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2019ஆம் ஆண்டுக்காக அந்த செலவின விடயங்களின் ரூபா 2,178 மில்லியனான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், பொறுப்புகள் முறையாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது மேலதிக நிதியேற்பாடுகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டு எல்லையினுள் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என 255/2017ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் திட்டவட்டமான அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தன. அந்த எல்லையினை விஞ்சி பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் அந்த நிறுவனத்திடமிருந்து தெளிவுபடுத்தலை பெற்றுக்கொள்ளல் பொருத்தமானது ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2(ஈ) பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் எந்தவொரு பொறுப்பினையும் அதற்கடுத்த வருடத்திற்கு கொண்டுசெல்ல முடியாதென அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், 177 செலவினத் தலைப்புகளுக்குரிய 722 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் பயன்பாட்டின் பின்னரான சேமிப்பு ரூபா 17,783 மில்லியன் கூட்டுத்தொகை ரூபா 81,977 மில்லியனை விஞ்சி ரூபா 99,760 மில்லியனான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், பொறுப்புகள் முறையாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது மேலதிக நிதியேற்பாடுகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டு எல்லையினுள் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என 255/2017ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் திட்டவட்டமான அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தன. அந்த எல்லையினை விஞ்சி பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் அந்த நிறுவனத்திடமிருந்து தெளிவுபடுத்தலை பெற்றுக்கொள்ளல் பொருத்தமானது ஆகும். |
| **(உ)** | **243/2015 ஆம் இலக்க மற்றும் 2015 யூன் 24 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றிக்கை** | 6003 தொகுதியில் வைப்புச் செய்யப்பட்ட கணக்கு பூச்சிய பெறுமதியாக குறிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆண்டு முதல் அந்த செயற்பாடுகள் வருடாந்த மதிப்பீடாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த மீதிகளில் கொழும்பு மாவட்டச் செயலகத்தின் ரூபா 10 மில்லியனான வரவு மீதியை அரச நிதி திணைக்களத்திற்கு சமர்ப்பித்து பதிவழிப்பதற்காக நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 6003 இன் கீழ் வருகின்ற 03 வைப்புக் கணக்குகளில் ரூபா 10.111 மில்லியன் தொகையான கூட்டுப்பெறுமதியை தீர்த்து வைக்காமல் தொடர்ந்தும் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | எடுக்கப்படுவதுடன், இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தின் ரூபா 108,029.77 ஆன மீதி வருமான மீளளிப்பு வருமானப் பத்திரமொன்றினை திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி அங்கீகாரத்தினை பெற்று திருத்துவததற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

### 2.2.1 உப கடன்களை அறவிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அரசின் நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக வழங்கப்பட்டிருந்த உப கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 177,149,514,240 ஆகும். அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (அ) உப கடன் தவணைகள் மற்றும் வட்டி அறவீடகள் நிலுவையாக காணப்பட்ட | பொருத்தமான நடைமுறையொன்றி னூடாக நிலுவைக் | இந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக எடுக்க வேண்டிய |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானத்தினை அறவிடுதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம், கடன் தவணைகளாக அறவிடப்பட வேண்டிய ரூபா 10,047,406,029 மற்றும் கடன் வட்டியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,134,732,056 ஆக ரூபா 12,182,138,085 கூட்டுத்தொகையான நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து நடவடிக்கைகளும் பொது திறைசேரியினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், செயற்பாடற்றுக் காணப்பட்ட வ/ப தேசிய கடதாசிக் கம்பனிக்கு வழங்கிய ரூபா 50,000,000.00 தொகை மற்றும் இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்திங்க வழங்கப்பட்டிருந்த ரூபா 8,676,923.00 ஆன கடன் தொகையை தற்போது அமைச்சரவையின் அங்கீகாரத்துடடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் நீண்ட காலமாக அறவீடு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 275,578,710.85 மற்றும் நிலுவைக் கடன் மீதியான ரூபா 564,199,380.61 ஆகியவற்றை 2019ஆம் ஆண்டின் போது அறவீடு செய்வததற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (i) இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் | பொருத்தமான நடைமுறையொன்றி | நிதி அமைச்சின் பரிந்துரைகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு 1999 மற்றும் 2000ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 550,990,000 மற்றும் ரூபா 222,350,000 மற்றும் அதன் மீது அறவிடப்பட வேண்டிய வட்டியான ரூபா 612,893,552 ஆக ரூபா 1,386,233,552 கூட்டுத்தொகையை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது. | னூடாக நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்திற்கொண்டு 2019.04.09ஆந் திகதி அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட்டு, நிலவும் கட்டிடங்களை வாடகைக்கு வழங்குவதன் மூலம் மற்றும் இயந்திர உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் மொத்த தொகை திறைசேரிக்கு அனுப்பப்படுவதுடன், 2019.10.07ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் மேலதிக பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | பதுளை சணச சங்கத்திற்கு 1992ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 11,114,479 ஆன உப கடன் மற்றும் அதன் மீது அறவிடப்பட வேண்டிய வருடாந்த வட்டி 3 சதவீதமான ரூபா 9,002,728 படியாக ரூபா 20,117,207 | பொருத்தமான நடைமுறையொன்றினூடாக நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சணச சங்கம் மற்றும் சர்வோதய பொருளாதார முயற்சிகள் (கெரன்டி) லிமிடட் இற்கு வழங்கப்பட்டிருந்த உப கடனை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரினால் உரித்து கோரல் கடிதமொன்று (Letter of Demand) அனுப்புவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகையை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது. உப கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அந்த கடன் மீதி 2006ஆம் ஆண்டின் போது செலுத்தி தீர்க்க வேண்டியதாக காணப்பட்டதாக அதன் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | | சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (iii) | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 116,000,000 ஆன உப கடன் தொகையில் ரூபா 111,600,000 ஆன கடன் தவணை பணம் மற்றும் அவற்றுள் ரூபா 11,600,000 ஆன கடன் தொகையின் மீது அறவிடப்பட வேண்டிய வருடாந்தம் 5 சதவீதமான வட்டித் தொகையான ரூபா 5,220,000 படியாக ரூபா 116,820,000 கூட்டுத்தொகையை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இயலாதிருந்தது. | பொருத்தமான நடைமுறையொன்றி னூடாக நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களுடன் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கூட்டுத்தாபனத்தின் பாதகமான நிதி நிலைமை காரணமாக கடன் தீர்ப்பதற்கான இயலுமை இல்லாத காரணத்தால் குறித்த கடனை பதிவழிக்குமாறு மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடன் தொகையினை பதிவழிப்பதற்கு மற்றும் வட்டியை கைவிடுவதற்கு அமைச்சரவை |

| | | | |
|---|---|---|---|
| | | | விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து பின்னர் அங்கீகாரத்தினை பெற்றதன் பின்னர் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | சர்வோதய பொருளாதார தொழில்முயற்சி அபிவிருத்தி சேவைகள் (கெரன்டி) லிமிடட்டிற்கு, Renewable Energy for Rural Economic Development Project (RERED) இற்கு வழங்கப்பட்டிருந்த உப கடன் தொகை 2018 மார்ச்ச 31ஆந் திகதி அளவில் முழுமையாக செலுத்தி தீர்க்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31ஆந் திகதியளவிலும் அவற்றுள் ரூபா 633,395,760 ஆன தவணைப் பணம் மற்றும் ரூபா 56,973,946 ஆன வட்டித் தொகையுமாக ரூபா 690,369,709 கூட்டுத்தொகை இதுவரையிலும் | பொருத்தமான நடைமுறையொன்றி னூடாக நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சணச சங்கம் மற்றும் சர்வோதய பொருளாதார முயற்சிகள் (கெரன்டி) லிமிடட் இற்கு வழங்கப்பட்டிருந்த உப கடனை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரினால் உரித்து கோரல் கடிதமொன்று (Letter of Demand) அனுப்புவதற்கு சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (v) | உபகடன் உடன்படிக்கை 06இன் கீழ் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டிருந்த உபகடன் தொகையில் உடன்படிக்கையின் பிகரகாரம், மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,041,432,228 ஆன தவணைப் பணம் மற்றும் அதன் மீது அறவிடப்பட வேண்டிய வட்டியான ரூபா 564,229,107 ஆக ரூபா 3,605,661,335 கூட்டுத்தொகை அறவிடப்பட்டிருந்தது. | பொருத்தமான நடைமுறையொன்றினூடாக நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை மற்றும் மில்கோ கம்பனி ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டிருந்த உப கடன்களில் அந்த நிறுவனங்களுக்கு தீர்க்கும் இயலுமையொன்று இல்லாமையால் அந்த நிறுவனங்களினதும், அரச பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையை மூலதனமாக்கியமையின் மூலம் அரசின் மூலதனப் பங்களிப்பினை அதிகரிப்பதற்கும் வட்டியை கைவிடுவதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (vi) | மில்கோ நிறுவனத்தின் தொழிற்சாலையின் புதுப்பித்தல் (பகுதி 1) இங்காக கட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்டிருந்த உப கடன் தொகையில் மீளாய்வாண்டின் | பொருத்தமான நடைமுறையொன்றினூடாக நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த நிறுவனங்களின் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் கடன் தொகையை மூலதனமாக்குதல் மூலம் அரசின் மூலதனப் பங்களிப்பினை |

| | | | |
|---|---|---|---|
| | இறுதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 5,476,523,562ஆன தவணைப் பணம் மற்றும் அதன் அடிப்படையிலான வட்டியான ரூபா 886,412,720 ஆக ரூபா 6,362,936,282 அறவிடப்பட்டிருக்கவில்லை. | | அதிகரிப்பதற்கு மற்றும் வட்டியை கைவிடுவதற்கு உரிய மேலதிக பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ஆ) | கம்பனியின் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியினால் குறித்த பணத்தை திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கோல்டன் கீ வைப்பாளர்களுக்கு 2015ஆம் ஆண்டு முதல் செலுத்தப்பட்ட ரூபா 8,189,000,000இற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உப கடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு அல்லது ஆண்டின் இறுதி வரையிலும் உபகடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், குறித்த பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை | பொருத்தமான நடைமுறையொன்றினூடாக நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018.05.14ஆந் திகதிய MP/PE/02/CM/2018/86 ஆம் இலக்க மைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2018.05.22ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கிக்கு விடுவிக்கப்பட்ட பணத்தை வட்டியற்ற கடன் தொகையாக மாற்றுவதற்கும், இலங்கை மத்திய வங்கியுடன் அதற்காக உபகடன் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடுவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், உபகடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கணக்கு வைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்காக திறைசேரிக்கு |

| | |
|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்புமாறு இலங்கை மத்திய வங்கிக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்ட போதிலும், உபகடன் உடன்படிக்கையை கைச்சாத்திடும் இயலுமை இல்லாதிருந்ததாக இலங்கை மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்டிருந்தது. உபகடன் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடாது கணக்கு வைத்தல் இயலாது என்பதால் 2019ஆம் ஆண்டினுள் உபகடனாக இந்த தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>அதன் பிரகாரம், அங்கீகாரத்தின் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு உரிய பணிகளை முன்னெடுக்குமாறு 2020.03.11ஆந் திகதி கடிதத்தில் அனைத்து தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 3) அதன் பிரகாரம் உபகடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடல் அல்லது உபகடனாக கணக்கு வைப்பதற்கு தேவை ஏற்படாது. |

| | | |
|---|---|---|
| (இ) 2019ஆம் ஆண்டின் போது திறைசேரியின் இறுதிக் கணக்கு பொழிப்புகளின் பிரகாரம் விடய இலக்கம் 2302இன் கீழ் (உபகடன் வழங்குதல்) ரூபா 12,166,171,721 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் , அரசின் நிதிக்கூற்றுக்கள் குறிப்பு இலக்கம் 20இன் பிரகாரம், கணக்கு வைக்கப்பட்டிருந்த உப கடன் பெறுமதி ரூபா 11,466,171,721 ஆகும். அதன் பிரகாரம், இறுதிக் கணக்கு பொழிப்புகள் மற்றும் நிதிக்கூற்றுக்களிடையே வழங்கப்பட்டுள்ள உப கடன் தொகை (On – Leanding) பெறுமதியில் ரூபா 700,000,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | பொருத்தமான நடைமுறையொன்றி னூடாக நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்குறிப்பிடப்பட்ட பதில் பொருந்தும். |

## 2.2.2 நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக பொது திறைசேரியினால் 02 வணிக வங்கிகளுக்கு மற்றும் ஒரு | பிணைமுறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்களை வெளியிடுவதங்கு | **காலாவதியான திறைசேரி பிணைமுறிகள் மற்றும் நிவாரணக் கடிதங்கள்** |

நிறுவனத்திற்கு வெளியிடப்பட்டிருந்த ரூபா 8,476 மில்லியன் பெறுமதியான 07 நிவாரணக் கடிதங்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 75 மில்லியன் (ரூபா 13,622.55 மில்லியன்) பெறுமதியான 06 நிவாரணக் கடிதங்கள் காலாவதியாகியிருந்தன. விபரங்கள் பின்வருமாறு.

| Institution | Date of Expiry | Outstanding 31.12.2019 | Amount Capital |
|---|---|---|---|
| | | USD Mn. | Rs.Mn. |
| Lanka Sathosa Ltd. | 31.08.2015 | | 1,238.80 |
| Lanka Sathosa Ltd. | 30.04.2015 | | |
| Lanka Sathosa Ltd. | 31.07.2015 | | 6,547.60 |
| Co-operative Wholesale Establishment | 11.01.2018 | | 400.00 |
| Co-operative Wholesale Establishment | 22.02.2018 | | 289.60 |
| Sri Lanka Air Lines Limited | 31.12.2019 | 32.50 | |
| Sri Lanka Air Lines Limited | 31.12.2019 | 32.50 | |
| Mihin Lanka Ltd. | | 2.50 | |
| Mihin Lanka Ltd. | | 2.50 | |
| Mihin Lanka Ltd. | | | 1,650.00 |
| Mihin Lanka Ltd. | | | 1,650.00 |
| Mihin Lanka Ltd. | | 2.50 | |
| Mihin Lanka Ltd. | | 2.50 | |
| | | ---------- | ------------ |
| | | 75.00 | 8,476.00 |
| | | ======== | ======= |

உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

19/1659/108/147 மற்றும் 2019.05.30ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இலங்கா சதொச லிமிடட் இற்கு வழங்கப்பட்டிருந்த வசதியளிக்கும் மூன்று கடிதங்களின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் செலுத்த வேண்டியுள்ள வட்டித் தொகைகளின் கூட்டுத்தொகையான ரூபா 9.8 பில்லியன் தொகையை காலக் கடனொன்றாக மாற்றி 11% வருடாந்த வட்டி விதிகத்தின் கீழ் பொது திறைசேரியினால் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுக்கு செலுத்துவதற்கும் அதற்கு தேவையான நிதியேற்பாடுகளை மேற்கொள்வதற்கும் 2019.06.25ஆந் திகதி அமைச்சரவையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் (ச.தொ.ச) இனால் நெல் விற்பனை சபையிடமிருந்து நெல்

இருப்பினை பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 880 மில்லியன் வசதியளிக்கும் கடிதங்கள் இரண்டின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந் த நெல் இருப்பிற்குரிய பணத்தை செலுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு அபிவிருத்தி நிதி திணைக்களம் மற்றும் குறித்த விடயப்பொறுப்பு அமைச்சு மற்றும் ச.தொ.ச நிறுவனம் ஆகியவற்றுக்கு அறிவித்துள்ளதுடன், தற்போது ச.தொ.ச நிறுவனத்திடமுள்ள இருப்பினை விற்பனை செய்வதன் மூலம் மற்றும் லங்கா ச.தொ.ச இடமிருந்து ச.தொ.ச நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய பணம் கிடைத்த பின்னர் அந்த கடன் தொகை தீர்க்கப்படும் என்பதும் ச.தொ.ச நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுவரையிலும் அதில் தீர்க்கப்படாத மீதி ரூபா 689.6 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது.

ஸ்ரீ லங்கன் விமான கம்பனிக்காக மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்ட

| | | |
|---|---|---|
| | | ஐ.அ.டொலர் 32.5 மில்லியன் படியான இரு வசதியளிக்கும் கடிதங்களின் செல்லுபடியான காலம் 2020.12.31 வரை நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.<br><br>மிஹின் லங்கா கம்பனிக்கு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்ட ஆறு வசதியளிக்கும் கடிதங்களின் செல்லுபடியான காலத்தை நீடிப்பு செய்யுமாறு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு தேவையான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. |

### 2.2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண "பீ" கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு 70 நிறுவனங்களுக்குரிய பல வருடங்களாக | நிலுவைப் பணத்தை அறவீடு செய்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | முற்பண "பீ" கணக்கினை பகுப்பாய்வு செய்த பின்னர் மிகவும் உயரிய மட்டத்தில் |

முன்கொண்டுவரப்படும் முற்பண ''பீ'' கணக்குகளில் காணப்பட்ட ஓய்வுபெற்ற, மரணமடைந்த, பணி வறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 602,462,162 ஆன மீதி அறவிடப்படாது காணப்பட்டது.

காணப்படும் 10 நிறுவனங்கள், முதல் தொகுதியாக தெரிவு செய்யப்பட்டு அவற்றுள் 7 நிறுவனங்கள் இதுவரை அழைக்கப்பட்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய 3 நிறுவனங்களை எதிர்காலத்தில் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.